(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 169.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2026 ஆகஸ்ட் 04, செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன,** சபாநாயகர்

**கௌரவ (டாக்டர்) ரிஸ்வி சாலி**, பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ (திருமதி) ஹேமாலி வீரசேகர**, குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ கலாநிதி ஹரினி அமரசூரிய,** பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) ஏ.எச்.எம்.எச். அபயரத்ன,** பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) கிரிஷாந்த அபேசேன,** விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர்

**கௌரவ அனுர கருணாதிலக்க,** துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் மற்றும் வலுசக்தி அமைச்சர்

**கௌரவ கே.டீ. லால் காந்த,** கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்

**கௌரவ சுனில் குமார கமகே,** இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்

**கௌரவ ராமலிங்கம் சந்திரசேகர்,** கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) நலிந்த ஜயதிஸ்ஸ,** சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ (கலாநிதி) அனில் ஜயந்த,** தொழில் அமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி ஹர்ஷன நானாயக்கார,** நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) தம்மிக பட்டபெந்தி,** சுற்றாடல் அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) உபாலி பன்னிலகே,** கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர்

**கௌரவ (திருமதி) சரோஜா சாவித்திரி போல்ராஜ்,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) சுசில் ரணசிங்ஹ,** வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்

**கௌரவ பிமல் ரத்நாயக்க,** போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ ஆனந்த விஜேபால,** பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கே.வி. சமந்த வித்யாரத்ன,** பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்

**கௌரவ வசந்த சமரசிங்க,** வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹினிதும சுனில் செனெவி,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,** கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ விஜித ஹேரத்,** வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ சதுரங்க அபேசிங்ஹ,** கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) (செல்வி) கௌஷல்யா ஆரியரத்ன,** வெகுசன ஊடக பிரதி அமைச்சர்

**கௌரவ அர்கம் இல்யாஸ்,** வலுசக்தி பிரதி அமைச்சர்

**கௌரவ நாமல் கருணாரத்ன,** கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ ஜனித ருவன் கொடித்துவக்கு,** துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ ரத்ன கமகே,** கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ எரங்க குணசேகர,** நகர அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ எண்டன் ஜயகொடி,** சுற்றாடல் பிரதி அமைச்சர்

**கௌரவ ஆர்.எம். ஜயவர்தன,** வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ நிசாந்த ஜயவீர,** பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ,** தொழில் பிரதி அமைச்சர்

**கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) அருண ஜயசேகர,** பாதுகாப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ கமகெதர திசாநாயக்க,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ வசந்த பியதிஸ்ஸ,** கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை பிரதி அமைச்சர்

**கௌரவ சுந்தரலிங்கம் பிரதீப்,** பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர்

**கௌரவ முனீர் முலாபர்,** சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி சுனில் வடகல,** பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ எரங்க வீரரத்ன,** டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர்

**கௌரவ ரீ. பீ. சரத்,** வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) நாமல் சுதர்சன,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **பி. ருவன் செனரத்,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரதி அமைச்சர்

கௌரவ **(டாக்டர்) மதுர செனெவிரத்ன,** கல்வி, உயர் கல்வி பிரதி அமைச்சர்

கௌரவ **தினிந்து சமன் ஹென்னாயக்க,** இளைஞர் விவகாரங்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **அருண் ஹேமச்சந்திரா,** வெளிநாட்டலுவல்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர்

கௌரவ **நலின் ஹேவகே,** தொழிற் கல்வி பிரதி அமைச்சர்

---

**கௌரவ ரொஷான் அக்மீமன**

**கௌரவ அஜித் அகலகட**

**கௌரவ அமிர்தநாதன் அடைக்கலநாதன்**

**கௌரவ அபூபக்கர் ஆதம்பாவா**

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ ரோஹித அபேகுணவர்தன**

**கௌரவ சட்டத்தரணி யூ.பி. அபேவிக்ரம**

**கௌரவ (டாக்டர்) நிஹால் அபேசிங்ஹ**

**கௌரவ (டாக்டர்) இராமநாதன் அர்ச்சுனா**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ எம்.கே. எம். அஸ்லம்**

**கௌரவ சட்டத்தரணி ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி**

**கௌரவ லக்ஸ்மன் நிபுண ஆரச்சி**

**கௌரவ (டாக்டர்) நஜீத் இந்திக்க**

**கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை**

**கௌரவ கயந்த கருணாதிலக்க**

**கௌரவ ரவி கருணாநாயக்க**

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி எம். நிசாம் காரியப்பர்**

**கௌரவ உபுல் கித்சிறி**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே**

**கௌரவ கதிரவேலு சண்முகம் குகதாசன்**

**கௌரவ சமிந்த லலித் குமார**

**கௌரவ சட்டத்தரணி சரத் குமார**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி நிலந்தி கொட்டஹச்சி**

**கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்**

**கௌரவ (திருமதி) எம்.ஏ.சீ.எஸ். சத்துரி கங்கானி**

**கௌரவ லசித் பாஷண கமகே**

**கௌரவ திலங்க யூ. கமகே**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி நிலூஷா லக்மாலி கமகே**

கௌரவ அஜந்த கம்மெத்தெகே

கௌரவ சதுர கலப்பத்தி

கௌரவ நிஹால் கலப்பத்தி

கௌரவ அஜித் கிஹான்

கௌரவ (டாக்டர்) ஜகத் குணவர்தன

கௌரவ (திருமதி) சமன்மலீ குணசிங்ஹ

கௌரவ கயான் ஜனக

கௌரவ குமார ஜயகொடி

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ சட்டத்தரணி அநுராத ஜயரத்ன

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ ரீ.கே. ஜயசுந்தர

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர

கௌரவ எம். ஏ. எம். தாஹிர்

கௌரவ சந்தன தென்னகோன்

கௌரவ ஜீவன் தொண்டமான்

கௌரவ சாமர சம்பத் தசனாயக

கௌரவ சுகத் வசந்த த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ தர்மப்பிரிய திசாநாயக்க

கௌரவ சுஜீவ திசாநாயக்க

கௌரவ சட்டத்தரணி சுசந்த தொடாவத்த

கௌரவ சுசந்த குமார நவரத்ன

கௌரவ (பேராசிரியர்) சேன நாணாயக்கார

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ நந்தன பத்மகுமார

கௌரவ அருண பனாகொட

கௌரவ நிமல் பலிஹேன

கௌரவ நிஷாந்த பெரேரா

கௌரவ அஜித் பி. பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ சட்டத்தரணி சித்ரால் பெர்னாந்து

கௌரவ ஸ்டெபனி பிரனாந்து

கௌரவ கந்தசாமி பிரபு

கௌரவ லால் பிரேமநாத்

கௌரவ பத்மசிரி பண்டார

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ ரவீந்திர பண்டார

கௌரவ சுதத் பலகல்ல

கௌரவ ஈ.எம். பஸ்நாயக

கௌரவ விஜேசிரி பஸ்நாயக்க

கௌரவ சுனில் பியன்வில

கௌரவ லெப்டினன் கமாண்டர் (ஓய்வுபெற்ற) பிரகீத் மதுரங்க

கௌரவ தாஹிர் மரிக்கார்

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ இம்ரான் மகரூப்

கௌரவ ருவன் மாபலகம

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபா

கௌரவ தனுஷ்க ரங்கனாத்

கௌரவ சஞ்ஜீவ ரணசிங்ஹ

கௌரவ ஆர்.எம். சமந்த ரனசிங்ஹ

கௌரவ ஆர்.எம். காமிணி ரத்நாயக்க

கௌரவ மஞ்சுல சுகத் ரத்னாயக

கௌரவ சுரங்க ரத்நாயக்க

கௌரவ அசோக சபுமல் ரன்வல

கௌரவ துரைராசா ரவிகரன்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ

கௌரவ சுனில் றாஜபக்ஷ

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்

கௌரவ வருண லியனகே

கௌரவ எம்.எஸ் அப்துல் வாசித்

கௌரவ கஞ்சன வெலிப்பிட்டிய

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ ஆர்.ஜீ. விஜேரத்ன

கௌரவ சட்டத்தரணி பிரியந்த விஜேரத்ன

கௌரவ ருவன் விஜேவீர

கௌரவ தர்மப்ரிய விஜேசிங்ஹ

கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹிருனி விஜேசிங்ஹ

கௌரவ அசித நிரோஷண எகொட வித்தான

கௌரவ ஜகத் விதான

**கௌரவ திலிப் வெதஆரச்சி**

**கௌரவ அதுல வெலதகொட**

**கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்**

**கௌரவ திலிண சமரகோன்**

**கௌரவ (டாக்டர்) நிஷாந்த சமரவீர**

**கௌரவ (செல்வி) அம்பிகா சாமிவெல்**

**கௌரவ (டாக்டர்) இளையதம்பி சிறிநாத்**

**கௌரவ ஷாந்த பத்ம குமார சுபசிங்ஹ**

**கௌரவ தேவானந்த சுரவீர**

**கௌரவ சந்தன சூரியஆரச்சி**

**கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜீ.டி.சூரியபண்டார**

**கௌரவ கிட்ணன் செல்வராஜ்**

**கௌரவ சட்டத்தரணி அர்ஜுன சுஜீவ சேனசிங்ஹ**

**கௌரவ (டாக்டர்) ஜனக சேனாரத்ன**

**கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்**

**கௌரவ கபீர் ஹஷீம்**

**கௌரவ சந்திம ஹெட்டிஆரச்சி**

**கௌரவ சம்பிக ஹெட்டிஆரச்சி**

**கௌரவ (செல்வி) சட்டத்தரணி லக்மாலி ஹேமசந்திர**

**கௌரவ தினேஷ் ஹேமந்த**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி கீதா ஹேரத்**

**கௌரவ சட்டத்தரணி பாக்ய ஸ்ரீ ஹேரத்**

திருமதி குஷானி ரோஹனதீர, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. ஹன்ஸ அபேரத்ன, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. சனாதிபதியின் செய்திகள்:** சனாதிபதியிடமிருந்து கிடைத்த பின்வரும் செய்தியைச் சபாநாயகர் வாசித்தார்:—

M. No. 169

ශ්‍රී ලංකා ජනාධිපති
இலங்கை சனாதிபதி
President of Sri Lanka

எனது இல: பிஎஸ்/சிஎஸ்ஏ/00/7/IX/3/01

2026 யூலை மாதம் 27 ஆந் திகதி

**கௌரவ ஜ.டபிள்யு.எம். ஜகத் விக்கிரமரத்ன அவர்கள்**
சபாநாயகர்
இலங்கை பாராளுமன்றம்

மாண்புமிகு சபாநாயகர் அவர்களே

**(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்**

(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, மக்களிடையே அமைதியைப் பேணுவதற்கான தேவையைக் கருத்திற்கொண்டு, முதலாம் அட்டவணையில் குறித்துரைத்துக் காட்டப்படும் ஆயுதந்தாங்கிய படையின் சகல உறுப்பினர்களும் அதன் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைத்துக் காட்டப்பட்ட பிரதேசங்களில் மக்களிடையே அமைதியைப் பேணுவதற்காக அழைக்கப்படுகின்றனர் என ஆணையிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, மேற்படி கட்டளைச் சட்டத்தின் 21(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2(3) பிரிவுக்கமைய அதனை இத்தால் பாராளுமன்றத்துக்கு அறிவிக்கின்றேன்.

இங்ஙனம் - அன்புள்ள

அநுர குமார திசாநாயக்க
சனாதிபதி

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு
Democratic Socialist Republic of Sri Lanka

**2. பத்திரங்கள் சமர்ப்பித்தல்:** (1) சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் —

(i) 2023 ஆம் நிதியாண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் LVIII ஆம் பகுதியையும் மற்றும் ஒன்பதாவது தொகுதியின் XXXII ஆம் பகுதியையும் ;

(ii) 2024 ஆம் நிதியாண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் LXII மற்றும் LXIII ஆம் பகுதிகளையும், மூன்றாவது தொகுதியின் XXVIII ஆம் பகுதியையும் மற்றும் ஒன்பதாவது தொகுதியின் XLVI ஆம் பகுதியையும்; மற்றும்

(iii) 2025 ஆம் நிதியாண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் II ஆம் பகுதியையும் மற்றும் மூன்றாம் தொகுதியின் I ஆம் பகுதியையும் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கைகள் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(2) பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர், 2024 ஆம் ஆண்டுக்கான களனிப் பல்கலைக்கழகத்தின் தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை கல்வி, ஊழியப் படை மற்றும் மனித மூலதனம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர், அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள ஏழு நிறுவனங்கள் தொடர்பான விடயங்கள் பற்றி பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர், 2025 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் பிரகாரம் 2026.06.01 முதல் 2026.06.30 வரையுள்ளவாறு தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் செலவினத் தலைப்பு இலக்கம் 240 இன் கீழ் அபிவிருத்திச் செயற்பாடுகள் நிகழ்ச்சித்திட்டத்துக்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட குறைநிரப்பு ஒதுக்கீடுகள் தொடர்பான குறிப்பினை சமர்ப்பித்து, மேற்படி அறிக்கை

மேற்படி ஆவணங்கள் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(5) சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2023 ஆம் ஆண்டுக்கான தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை சுகாதாரம், வெகுசன ஊடகம் மற்றும் மகளிர் வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் —

(i) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் சுகாதார அமைச்சு தொடர்பான விடயங்கள் பற்றி பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை; மற்றும்

(ii) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் ஆயுள்வேத துறை தொடர்பான விடயங்கள் பற்றி பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கைகள் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர், 2024 ஆம் ஆண்டுக்கான இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(8) பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர், 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் ஆண்டறிக்கைகளைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கைகள் ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(9) விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் பரிணாமம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(10) சுற்றாடல் அமைச்சர், 2024 ஆம் ஆண்டுக்கான நீர் வளச் சபையின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(11) வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சர், 2025 ஆம் ஆண்டுக்கான வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மூலோபாய அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்:** (1) அரசாங்க நிதி பற்றிய குழுவின் தவிசாளர் கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா அக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட, 2026 சனவரி 01 ஆம் திகதியில் தொடங்கி 2026 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிறைவடைகின்ற நிதியாண்டின் பயன்பாட்டிற்காக 2025 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் குறைநிரப்புத் தொகை, - செலவினத் தலைப்பு 240 - நிகழ்ச்சித்திட்டம் 02 கீழான குறைநிரப்புத் தொகை தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**4. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) கோனபல, கோரலஇம, III ஆம் கட்டம், சில்வர்வெலி வத்த, இல. 721/79 இல் வதியும் திரு. ஓ.சி.எல். டி சில்வாவினது 2025.03.20 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ அஜித் பி. பெரேரா சமர்ப்பித்தார்.

(2) கிரிந்திவெல, மில்லதே, இல. 187/ஏ யில் வதியும் திரு. டப்ளியூ.எம். ஜயரத்னவினது 2025.12.08 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சட்டத்தரணி யூ.பி. அபேவிக்ரம சமர்ப்பித்தார்.

(3) குருணாகல், முத்தெட்டுகல, சிங்ஹ மாவத்தை, இல. 505/30 இல் வதியும் திரு. டப்ளியூ.எச்.எம். அபயரத்னவினது 2025.09.22 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ தர்மப்பிரிய திசாநாயக்க சமர்ப்பித்தார்.

(4) குருணாகல், முத்தெட்டுகல, சிங்ஹ மாவத்தை, சுப்ரீம்சிட்டி எனும் முகவரியில் வதியும் திரு. ஏ.எஸ். சேனாரத்னவினது 2026.05.14 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜீ.டி.சூரியபண்டார சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**5. பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரி (நீக்கல்):** பாதுகாப்பு அமைச்சர் சார்பாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம் — 2009 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரிச் சட்டத்தை நீக்குவதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

இச் சட்டமூலம் 2026 ஆகஸ்ட் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படும் என்றும் இச் சட்டமூலம் அச்சிடப்பட வேண்டுமெனவும் ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**6. செலவினத் தலைப்பு 240 - நிகழ்ச்சித்திட்டம் 02:** பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர் சார்பாக தொழில் அமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— †2026 சனவரி 01 ஆம் திகதியில் தொடங்கி 2026 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிறைவடைகின்ற நிதியாண்டின் பயன்பாட்டிற்காக, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியிலிருந்து அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான வேறு ஏதேனும் நிதியத்திலிருந்து அல்லது நிதியிலிருந்து அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தற்றுணிபின் பிரகாரம் அரசாங்கத்தால் பெறப்பட்ட ஏதேனும் கடன் தொகையிலிருந்து ரூபா எழுபத்து ஓராயிரத்து எழுநூறு மில்லியனை (ரூபா 71,700,000,000) விஞ்சாத மேலதிக ஒரு தொகை செலுத்தப்பட வேண்டுமென்றும் அத்தகைய தொகை இங்கே அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு செலவிடப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக:-

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| **தலைப்பு 240 -** | தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம் | |
| **நிகழ்ச்சித்திட்டம் 02 -** | அபிவிருத்திச் செயற்பாடுகள் | |
| | மீண்டெழும் செலவினம் | ரூ. 71,700,000,000 |
| | **மொத்தச் செலவினம்** | **ரூ. 71,700,000,000** |

† 2026 ஜூலை 24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2026 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க குறைநிரப்பு மதிப்பீட்டைப் பார்க்க.

1 ஆம் மற்றும் 2 ஆம் இலக்கக் குறைநிரப்பு மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா. 520,000,000,000 ஆகும்.

(பி.ப. 12.05 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

(பி.ப. 1.00 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

(பி.ப. 2.08 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

“கௌரவ (பேராசிரியர்) சேன நாணாயக்கார தலைமை தாங்குவாராக” என கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.39 மணிக்கு கௌரவ (பேராசிரியர்) சேன நாணாயக்கார தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. *அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்:*** பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர் சார்பாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 153(1) மற்றும் 41இ(1) ஆம் உறுப்புரைகளின் பிரகாரம், அரசியலமைப்புச் சபையின் அங்கீகாரத்திற்கமைய, 2026.02.05 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப் பெறும் வகையில் திருமதி எல்.எஸ்.ஐ. ஜயரத்ன அவர்கள் கணக்காய்வாளர் தலைமையதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளதாதலாலும்;

அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் பணிகளும் கடமைகளும் நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன், சம்பளம் அரசியலமைப்பின் 153(2) உறுப்புரையின் பிரகாரம், பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டு அரசாங்க திரட்டு நிதியத்தில் பொறுப்பிக்கப்பட வேண்டியுள்ளதாதலாலும்;

சனாதிபதியவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 2026.06.20 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கான அமப/26/1258/801/020 ஆம் இலக்க மற்றும் 2026.07.06 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய, கணக்காய்வாளர் தலைமையதிபதி, திருமதி எல்.எஸ்.ஐ. ஜயரத்ன அவர்களுக்கு பின்வருமாறு சம்பளத்தைச் செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாதலாலும்:—

(அ) கணக்காய்வாளர் தலைமையதிபதி, திருமதி எல்.எஸ்.ஐ. ஜயரத்ன அவர்களை குறித்த பதவிக்கு நியமித்த 2026.02.05 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில், அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 10/2025 இன் பிரகாரம், SL- 4 சம்பள அளவுத்திட்டத்தின் (175,000-12x5,300-238,600) 5 ஆவது சம்பளப் படிநிலையில் நிறுவி, அதற்கமைய குறித்த சுற்றறிக்கையின் அட்டவணை II இற்கமைவாக ரூபா 196,200/- அளவான சம்பளப் படிநிலைக்கு ஒத்ததாக, அட்டவணை III இற்கமைவாக பிரகாரம் ரூபா 170,528/- சம்பள படிநிலையில் நிறுவி சம்பளத்தைச் செலுத்துவதற்கும்;

(ஆ) அச்சம்பள அளவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வருடாந்த சம்பள ஏற்றங்களை செலுத்துவதற்கும் மற்றும் மேற்குறித்த சுற்றறிக்கையில் அவ்வப்போது மேற்கொள்ளப்படும் திருத்தங்கள் உட்பட்டு சம்பள மாற்றத்தை மேற்கொள்வதற்கும்.

அதற்கேற்ப, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 153(2) உறுப்புரையின் பிரகாரம், கணக்காய்வாளர் தலைமையதிபதி, திருமதி எல்.எஸ்.ஐ. ஜயரத்ன அவர்களுக்கு அரசாங்கத் திரட்டு நிதியத்தில் பொறுப்பிக்கப்படுமாறு மேலே குறிப்பிடப்பட்ட மாதாந்த சம்பளம் செலுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

“விவாதம் இப்போது ஒத்திவைக்கப்படுமாக” என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன்படி விவாதம் ஒத்திவைக்கப்பட்டது; அதிலிருந்து விவாதம் எதிர்வரும் திகதியொன்றில் நடைபெறும்.

**8. ஒத்திவைப்பு (வாடகைக் குடியிருப்பாளர்களுக்கு நிரந்தர வீடுகளை வழங்குவதற்கான வேலைத்திட்டம்)**: “இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக” என பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

அவ்வேளை, நேரம் பி.ப. 5.30 மணிக்கு மேலாகிவிடவே, பி.ப. 6.03 மணிக்கு தலைமைத் தாங்கும் உறுப்பினர் இன்றைய தின சபைத் தீர்மானத்திற்கிணங்க பாராளுமன்றத்தை ஒத்திவைத்தார்.

அதன்படி பாராளுமன்றம், 2026 ஆகஸ்ட் 05 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 9.30 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.